REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ நிலைகையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

திராவிட நாளிதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 23உ புதன் (9—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 24உ வியாழன் (10—10—57) [இதழ் 100

ரஷ்ய செயற்கைச் சந்திரன்: ஆயுதப் பரிகரணத் தீர்மானத்திற்குத் திருத்தம்

வானவெளியில் மிதந்து சென்று குறிப்பிட்ட இலக்கில் வெடித்துத் தாக்கக்கூடிய குண்டுகளைக் கட்டுப்படுத்துவது பற்றிய திட்டமான விதியையும் சேர்த்துக் கொள்ளுவதற்காக மேற்கு நாடுகள் ஐ. நா. சபையில் தாக்கல் செய்யவிருந்த ஆயுதப் பரிகரணத் தீர்மானத்தைத் திருத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யா வெற்றிகரமாக செயற்கைச் சந்திரனை மிதக்கவிட்டிருப்பதை ஒட்டி விவாதிக்கக்கூடிய இந்த மேற்கு வல்லரசுகள், ஆயுதப் பரிகரணத் தீர்மானத்தையும் திருத்துவதுபற்றி விவாதித்துள்ளனராம்!

வடவரின் இந்தித் திணிப்பு:

‘தமிழரின் தன்மானத்திற்குத் தரப்படும் இறுதி அறைகூவல்’

‘நுண்கலைகளை ஆக்கும் நாம் அவற்றை காக்கும் திறம் படைத்தோரா, இல்லையா?’

‘இந்தப் பரீட்சைதான் நெருங்கிக் கொண்டிருக்கிறது’

ஈ. வெ. கி. சம்பத் இலட்சியக் குரல்!

"இப்பொழுதுதான் வடநாட்டு இந்தி வெறியர்களுக்குத் தலை ஆட்டம் கொடுத்திருக்கிறது; இன்றையத் தினம்தான் அவர்கள் நிலை குலைந்திருக்கிறார்கள்; ஆனால் இதைச் சரிக்கட்டுவதற்கு—இப்பொழுது ஒரு மூன்று மாதத்திலே சரிக்கட்ட முடியும் என்ற கருத்திலே ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி, கேர் கமிஷனின் அறிக்கையைப் பரிசீலித்து, ராஷ்டிரபதிக்குச் சிபாரிசு செய்யப்போகிறது. அந்தக் கமிட்டியினுடைய சிபாரிசுகள் நிச்சயமாக நம்முடைய தன்மானத்திற்கும், நம்முடைய பெருமைக்கும்—சுதந்தரத்திற்கும் விடுக்கப்படுகின்ற மிகப் பலமான—நான் குறிப்பிட்டதைப்போல் அநேகமாகக் கடைசி அறைகூவலாக இருக்கப்போகிறது. அதைத் தமிழர்களும், தமிழர்களோடு இன்றையத் தினம் விழிப்புப் பெற்றிருக்கின்ற ஏனைய தென்னாட்டவர்களும் எப்படிச் சமாளிக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இந்த நாட்டினுடைய எதிர்காலச் சரித்திரத்திலே பெரிய திருப்பங்களும்—மாற்றங்களும் ஏற்படப்போகின்றன.

"நம்முடைய பொதுச்செயலாளர் அவர்கள் குறித்துச் சொன்ன நாளிலே நாடு பூராவும் நாம் கூடிப் பேசப்போகிறோம். மூன்று மாதக் காலத்திற்குப் பிறகு—அவர்களுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு, வெறும் வாய்ச் சொல்லில் மட்டும் வீரர்கள் அல்ல—இவர்கள் வகையான செயல் புரியக்கூடிய நல்ல வீரர்கள் என்பதைக் காட்டுவதற்கு அண்ணா அவர்கள் நமக்கு வழிகாட்ட இருக்கிறார்கள்.

"தமிழர்கள், நல்ல நுண்கலைகளை இரசிப்பதிலே நல்ல இரசிகர்கள்; நல்ல கலைகளை ஆக்குவதிலே வல்லவர்கள்—இது இரண்டும் தான் உலகுக்குத் தெரியும்; ஆனால் இன்னும் சில மாதங்களில், தமிழர்கள் தாங்கள் ஆக்கிய கலைகளைக் காப்பதற்கு வல்லவர்களா இல்லையா என்பதற்கு ஒரு பெரிய பரீட்சை வரப்போகிறது—பெரிய சோதனை வரப்போகிறது.

"நாம் கலைகளை ஆக்க மட்டுமல்ல—அதைக் காக்கவும் தெரிந்தவர்கள்; காக்கவும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதை அண்ணாவின் தலைமையிலே காட்டத்தான் போகிறோம்,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், திருவண்ணாமலை தி. மு. கழக மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"'ஹோம்லண்ட்' இதழைப் படித்த பிறகு, முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் பார்லிமெண்டிலே ஒலித்த பிறகு, எவ்வளவு அருமையான 'உதய சூரியன்' அங்கெல்லாம் தோற்றுவிக்கப்படுகிறான் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேனென்றால், தமிழ் நாட்டிலே இருக்கின்ற சில 'சொகுசான' அரசியல்வாதிகள்—ஓய்வு பெற்றுவிட்டவர்கள் — மக்களிடத்திலே செல்வாக்கை இழந்துவிட்டவர்கள்—சாய்வு நாற்காலியிலே படுத்துக்கொண்டு அரசியல் பேசுகின்றவர்கள், 'திராவிட நாடு என்பது ஒரு கற்பனை; திராவிட நாடு என்பது கைகூடாத ஒன்று' என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காக நான் சொல்லுகிறேன்.

"இன்றையத் தினம் மத்திய சர்க்காரிலே அவரவர்களுக்கிருக்கின்ற பிடிப்பை உடைத்தெறிய வேண்டுமென்ற ஆவல் பல்வேறு பகுதிகளிலேயும் துண்டு துண்டாகக் கிளம்புகின்றது. தமிழ் நாட்டில் அண்ணா அவர்களின் அருமையான வழித்துணையினாலே தமிழர் அதற்கொரு உருவத்தைக் கண்டிருக்கிறார்கள், திராவிட நாடு இலட்சியத்தின் வாயிலாக!

"மற்றப் பகுதிகளிலே இருக்கின்றவர்களுக்கு, சுதந்தரப் போர் தீர்ந்ததற்குப் பிறகு இன்றைக்குத்தான் அவர்களுக்கு உடம்பிலே 'இங்கே வலிக்கிறது—அங்கே வலிக்கிறது; என்ன செய்வது?' என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

"நாம் நோயின் மூலத்தையும் கண்டுபிடித்தோம்; அதற்கான மருந்தையும் கண்டு பிடித்துக்கொண்டு வருவதற்கான பெருமுயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

"இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இருக்கிறவர்களுக்கு, இன்றைக்குத்தான் நோயினுடைய முற்றிய......அறிகுறிகள் தெரிகின்றன. அதற்கான மருந்து என்ன என்று தேடுகின்ற நேரத்திலே

(4-ம் பக்கம் பார்க்க)

கேட்க வேண்டியதைக் கேட்டுவிட்டாராம்!

கிடைப்பது பற்றி இப்போது கூறமுடியாதாம்!

அமெரிக்க விஜயம் பற்றி டி. டி. கே.

வாஷிங்டன், அக். 8—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி உதவி தேடி அமெரிக்கா சென்றுள்ள இந்தியாவின் நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, குடியரசுத் தலைவர் ஐசனோவரைச் சந்தித்து இந்தியாவின் 'நிலை'யை விளக்கியதாகவும், இந்தியாவின் திட்டம் குறித்து ஐசனோவர் மிகுந்த அக்கறை கொண்டிருப்பது சந்திப்பின்போது தெரிய வந்ததாகவும் செய்தி தரப்படுகிறது.

"அமெரிக்க விஜயத்தால் உருவான பலன் பெற்றுவிட்டீர்களா?" என்று நிருபர்கள் டி. டி. கே.-யைக் கேட்டபோது, 'சந்திக்கவேண்டியவர்களைச் சந்தித்து, விளக்க வேண்டியதை விளக்கி, கேட்க வேண்டியதைக் கேட்டுவிட்டேன்; அந்த வகையில் வெற்றியே! ஆனால், விளைவை யாரால்தான் கூற முடியும்?"

என்று டி. டி. கே. பதில் தந்துவிட்டாராம்!

காங்கிரசாரின் வல்லடி வழக்கு தோல்வி

கள்ளக்குறிச்சி தேர்தலில் கழக வெற்றி உறுதிசெய்யப்பட்டது

மறு எண்ணிக்கையில் நமது அபேட்சகருக்கு அதிக வாக்குகள்

நாகை, அக். 7—

பொதுத் தேர்தலின்போது கள்ளக்குறிச்சி இரட்டை உறுப்பினர் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களான தோழர்கள் சி. நடராசன் (பொதுத் தொகுதி), எம். ஆனந்தன் (ரிசர்வ் தொகுதி) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தலை ஆட்சேபித்து, தோற்றுப்போன காங்கிரஸ் அபேட்சகர் தோழர் கே. பார்த்தசாரதி தேர்தல் வழக்கு மன்றத்தில் மனுக் கொடுத்தார்.

இந்த வழக்கு நாகப்பட்டினம் செஷன்ஸ் நீதிபதியும் 'டிரிபியூனல்' நீதிபதியுமான ஹாஜி. பி. குன்ஹமட் குட்டி முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கழக அபேட்சகர் தோழர் சி. நடராசன் அவர்கள் காங்கிரஸ் அபேட்சகர் தோழர் கே. பார்த்தசாரதியைவிட 81 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றது அறிந்ததே.

ஓட்டுகள் கணக்கெடுக்கப்பட்டபோது, ஓட்டு எண்ணும் அதிகாரிகள் எல்லோரும் தி. மு. கழக அனுதாபிகளாக இருந்ததாகவும், வெற்றி பெற்ற நடராசனுக்கு ஆதரவாக செல்லாத ஓட்டுகளை செல்லுபடியாக்கியதாகவும், அதனால் [illegible] ஓட்டுகளை எண்ணினால் தான்தான் (பார்த்தசாரதி) வெற்றி பெறக்கூடும் என்றும், நீதிமன்றம் ஓட்டுகளை எண்ண உத்தரவிட வேண்டும் என்றும் தோழர் பார்த்தசாரதி கொடுத்திருந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

ஓட்டுகளை எண்ண, நாகை டிரிபியூனல் நீதிபதியும், சென்னை உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டனர்.

அதன்படி இன்று (7-10-57) நாகை தேர்தல் வழக்குமன்ற (டிரிபியூனல்) நீதிபதி முன் ஓட்டுகள் மீண்டும் கணக்கிடப்பட்டன.

கள்ளக்குறிச்சியில் ஓட்டுகள் எண்ணியபடி ஓட்டு விவரம்:—

சி. நடராசன் (தி.மு.க.)	25,020
கே. பார்த்தசாரதி (காங்.)	24,939
வித்தியாசம்	81

நாகையில் ஓட்டுகள் எண்ணியபடி ஓட்டு விவரம்:—

சி. நடராசன் (தி.மு.க.)	25,018
கே. பார்த்தசாரதி (காங்.)	24,934
வித்தியாசம்	84

காங்கிரஸ் அபேட்சகர் இந்த வழக்கின் மூலம் இரண்டாவது முறையாக மீண்டும் தோல்வியுற்றார்; கழக அபேட்சகர் தோழர் சி. நடராசன் வெற்றி பெற்றதாக நீதிபதி அறிவித்தார்.

ரிசர்வ் தொகுதி ஓட்டுகளை எண்ணவேண்டிய அவசியம் இல்லை என்று காங்கிரஸ் அபேட்சகரே நீதிபதியிடம் தெரிவித்ததால் ரிசர்வ் ஓட்டுகளை எண்ணவில்லை. (ந. கி.)

மேற்கு வங்க பாங்கி ஊழியர்கள்

வேலை நிறுத்தம்

இதர ஊழியர்களின் ஆதரவு திரள்கிறது

புதுடில்லி, அக். 8—

மேற்கு வங்க பாங்கி ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தருவதற்காக வரும் அக்டோபர் 10-ந் தேதியன்று இரண்டுமணி நேர அடையாள வேலை நிறுத்தம் செய்யுமாறு, எக்சேஞ்சு பாங்கி ஊழியர்களை, அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

நிலைமைகள் வளருவதைப் பொறுத்து, இதர பாங்கி மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதுபற்றி யோசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் 25,000 பேர் வேலை நிறுத்தம்

ஜப்பானில் 25,000 எஃகு—இரும்பு தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இந்த வேலை நிறுத்தம் காரணமாக 10·8 இலட்சம் பவுன் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—10—57 புதன்

என்ன செய்யப்போகிறர்?

இந்திமொழி, இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியே அல்லாது தனித்த தேசிய மொழி அல்ல என்று காங்கிரசு மேலிடம் அடிக்கடி வற்புறுத்திவருகிறது. அரசியல் சட்டமும் அதைத்தான் உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

அரசியல் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பதினன்கு மொழிகளும் இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழிகளாகும். அந்த அளவில்தான் இந்திமொழியும் ஒரு தேசிய மொழியாகுமே ஒழிய, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற மொழிகளைவிட கூடுதலாகவோ குறைவாகவோ இந்தி மொழி மட்டும் தேசிய மொழியாக இருக்கவில்லை என்று விளக்கம் தரப்பட்டுவருகிறது, காங்கிரசு மேலிடத்தால்.

பேரரசின் பொறுப்புவாய்ந்த பிரதமர் இந்தி மொழி பற்றி இவ்வாறு கூறிவரும் நேரத்திலேயே, அவருடைய அமைச்சரவையில் இடம் பிடித்துக்கொண்டுள்ள கூட்டுத் தோழர்கள், பிரதமரின் கூற்றுக்கு மாருக — முரணுகப் பேசி வருகின்றனர். அதாவது, சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற மொழிகளுக்கு இல்லாத தனித்தன்மை இந்தி மொழிக்கு உண்டு என்றும், எனவே ஈடு இணையற்ற தனிப்பெரும் தேசிய மொழி இந்தி மொழியாகும் என்றும், பிரதமரின் கூட்டுத்தோழர்கள் கூச்சலிட்டு வருகின்றனர்.

இந்தி மொழிபற்றி அளிக்கப்பட்டுவரும் விளக்கத்தில் ஒருமைப்பாடு இல்லாதது எப்படியோ இருக்கட்டும். இந்தி மொழியை மற்ற மொழியினர் மீது புகுத்தும் முயற்சி பற்றி இவர்களால் பேசப்பட்டுவரும் பேச்சிலாவது ஒருமைப்பாடு இருக்கின்றதா என்ருல், அதுவுமில்லை.

இந்தி மொழியைப் புகுத்துவதில் எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டும்; சிறிதளவு எதிர்ப்புக்கும் இடமில்லாதபடி இந்தியை நடைமுறைக்குக் கொண்டுவர முயலவேண்டும்; பிறமொழியின்கடுகளவுஎதிர்ப்பு இருப்பதாகதெரிந்தாலும் இந்தி நுழைப்பு முயற்சியைக் கைவிட்டுவிடவேண்டும் அல்லது தள்ளிப்போடவேண்டும்; என்றெல்லாம் இந்தியப் பிரதமர் அடுத்தடுத்துத் திருவாய் மலர்ந்தருளிவருகின்ருர். ஆனல், அவ்வாறு நயம்பட, வெளிப்படையாகக் கூறிவரும் அவரும், கூறிவருவதற்கொப்ப செயலளவில் நடந்துகொள்வதில்லை. அவர் சொல்லில் நயம் நிரம்பி இருக்கிறது; தண்மை கூடி நிற்கிறது; அறிவுடைமையும் மண்டிக் கிடக்கிறது. ஆனல், செயலிலோ ஆதிக்க வெறி, சதி, சூழ்ச்சி முதலிய சிறுசெயல்கள் படிந்துகிடக்கின்றன.

தனது ஆட்சிமொழியான இந்தி மொழியை வளப்படுத்துவதில் தனக்கு எந்த அளவு பொறுப்பும் கடமையும் இருக்கின்றதோ, அதே அளவு பொறுப்பும் கடமையும் அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள மற்ற பதின்மூன்று மொழிகளையும் வளப்படுத்துவதிலும் இந்தியப் பேரரசிற்கு உண்டு என்று இந்தியப் பிரதமர், இனிக்க இனிக்க எந்த நேரமும் பேசி வருகிறர். ஆனல், செயலளவிலோ, தாம் சொன்ன சொல்லை மறந்து மற்ற மொழிகளை உருக்குலைக்கச் செய்யும் வகையில் இந்தி மொழியின் ஆக்கத்திற்கு அவர் அடிகோலி வருகிறர்.

இந்திமொழி புகுத்தும் வகையில் இந்தியப் பிரதமரிடம் காணப்படும் முரண்பாட்டிற்கு மறுக்க முடியாததும் மறைக்க முடியாததுமான எத்தனையோ எடுத்துக்காட்டுகளை நம்மால் சுட்டிக்காட்ட முடியும். அத்தகைய எடுத்துக்காட்டுகளில் ஒன்ருக இருப்பதுதான் வானொலியில் நடைபெற்றுவரும் **விவித பாரதி** ஒலிபரப்பு நிகழ்ச்சி.

அந்த விவித பாரதி ஒலிபரப்பு நிகழ்ச்சியில், நிகழ்ச்சி இருக்கும் ஒவ்வொரு நாளிலும், இந்திமொழி நீங்கிய மற்ற பதின்மூன்று மாநில மொழிகளுக்கு சராசரி 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதாவது ஐந்து மணி நேர நிகழ்ச்சியில் மாநில மொழிகள் பதின்மூன்றுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள கால அளவு இந்த பதினைந்தே நிமிடங்கள் தான். அக்குறைந்த நிமிடங்களில் தமிழ்மொழிக்குக்கூட இடமிருக்கிறது என்பதுதான் வியப்புக்குரியது!

தமிழ்மொழிக்குக்கூட அல்லவா, இந்தியப்பேரரசு முக்கியத்துவம் அளித்திருக்கிறது! இந்தியப் பேரரசின் தாராளாமே தாராளம்!

இந்திய அரசியல் சட்டத்தினல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தி உள்ளிட்ட பதினன்கு மொழிகளும் தேசிய மொழிகள்தான்; அவை அனைத்தும் சமநிலையில் வளம் பெறுவதற்கு ஒத்தமுறையில் முயற்சிக்கப்படும்; மொழிக்குத் தனிச் சலுகை எதுவும் காட்டப்பட மாட்டாது; என்ற இந்தியப் பிரதமர் பேச்சு, எந்தவகையில் செயலாற்றப்பட்டு வருகிறது என்பதற்கு இந்த விவித பாரதி ஒலிபரப்பு நிகழ்ச்சி ஒன்றே போதிய சான்ருகும்.

இந்த விவித பாரதி நிகழ்ச்சியில் பொதுவாக திராவிட மொழிகளுக்கும் குறிப்பாகத் தமிழ் மொழிக்கும் தரப்பட்டுள்ள தாழ்நிலையை உடனடியாக மாற்றி அமைக்கவேண்டும் என்று, நமது முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் தனது கண்டனத்தையும், மாற்றுத் திட்டத்தையும் தந்துள்ளார் அது, இது:—

(1) சென்னையில் உள்ள 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி தென்னுட்டின்-தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் பயன்படுத்தப்பட வேண்டும்; இதனுல் ஒவ்வொரு மொழிக்கும் தினந்தோறும் ஒன்றரை மணி நேரம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும், இந்த நிகழ்ச்சிகளை சிற்றலைகளிலும் ஒலிபரப்ப வேண்டும். மேலும், இந்த 4 மொழிகளிலும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் சாரத்தை, சென்னை, விஜயவாடா, கோழிக்கோடு, பெங்களூர் ஆகியவற்றில் உள்ள நடுத்தர அலை ஒலிபரப்புகள் மூலமும், பிரதேசத்தில் உள்ளவர்களும் பயன் பெறும்வண்ணம் ஒலிபரப்ப வேண்டும்.

(2) தென்னுட்டு மொழிகளில் சென்னையிலிருந்து ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் தூரக்கிழக்கு நாடுகளிலும், இலங்கையிலும் வாழும் தமிழர்களுக்கும் பயன்படும் வகையில் தக்க நேரத்தில் ஒலி பரப்பப்படவேண்டும்.

(3) எது எப்படி இருந்தாலும், இப்போதை ஏற்பாட்டின்படி தென்னுட்டின் நான்கு பிரதேச மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவானது என்பதால், 'விவித பாரதி' நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதை உடனே நிறுத்த வேண்டும்; இன்றேல், விபரீதமான விளைவுகள் தோன்றக்கூடும்.

இந்தியப்பேரரசின் வானொலி அமைச்சர் என்ன செய்யப் போகிருர்? தமிழ் மக்களைத் தொடர்ந்து இழிவுபடுத்தி வம்புக்கிழுக்கப் போகிருரா? அல்லது நல்லறிவு பெற்று தமிழுக்கும் மற்ற திராவிட மொழிகளுக்கும் இந்தியுடன் சமநிலை அளிக்கப்போகிருரா?

'இஸ்லாம் ஒரு மதமல்ல; ஒரு நல்லமார்க்கம்'

'இஸ்லாத்தின் கருத்துகளை பாமரரும் அறியுமாறு முயற்சிக்க வேண்டும்'

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்பதே தமிழரின் கொள்கை'

'அதுவே இஸ்லாம் பரவ வழி வகுத்தது'

நபிகள் நாயகம் விழாவில் அண்ணு

சென்னை, அக். 8—

நேற்று மாலை 6 மணிக்கு சென்னை—திருவல்லிக்கேணிக் கடற்கரையில், சென்னை இக்பால் மன்றத்தின் சார்பில் நபிகள் நாயகம் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

விழாவிற்கு திரு. பி. சர்புதீன் அவர்கள் தலைமை வகித்தார்.

அவரது தலைமையுரைக்குப்பின் பேசிய முன்னுள் மேயர் திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் இஸ்லாத்தினுடைய மாண்பையும், இஸ்லாமிய நெறி நிற்கும் அரபு நாடுகளின் ஒற்றுமையையும் விவரித்து, நபிகளின் போதனையே இதற்குக் காரணமென விளக்கினுர்.

அடுத்துப் பேசிய 'மணி விளக்கு' ஆசிரியர் தோழர் அப்துல் சமது அவர்கள், நபியின் சிறப்பையும், உலகப் பேராறிஞர்களின் போதனைகளையும், இஸ்லாத்தின் நல்ல கொள்கைகளையும் விளக்கி சிறந்தவொரு உரை நிகழ்த்தினுர்.

பின்னர் (அண்ணு அவர்கள் பேசுவதற்குமுன்) தலைவர் அவர்கள், அண்ணு அவர்களைப் பாராட்டிவிட்டு, "அண்ணுதுரை அவர்களை 'அறிஞர்' என்று அழைப்பதோடு, இன்று முதல் 'கல்விக் களஞ்சியம்' அறிஞர் திரு. அண்ணுதுரை என்று எல்லோரும் அழைக்கலாம்; இந்தக் 'கல்விக் களஞ்சியம்' என்ற பட்டத்தை நான் உங்கள் (மக்கள்) சார்பில் அளிக்கிறேன்" என்று குறிப்பிட்டார்; கூடியிருந்த மக்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்குமுகத்தான் கையொலி ஆரவாரம் செய்தனர்.

அடுத்து அண்ணு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நபிகள் நாயகம் விழாவை நடத்துவதில், நான் ஒரு தனி மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன். இஸ்லாத்தின் நல்ல அறிவுரைகள் இஸ்லாத்தின் கொள்கையறியாத எல்லா மக்களுக்கும் பயன்படவேண்டும்; ஆகையினுல், இவ்விழாவை நடத்துவதில் தனி மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன். ஆனல், உண்மையில் என்னையும், நண்பர் செங்கல்வராயன் அவர்களையும் கூட்டிவைத்து இவ்விழாவை நடத்துவதால், நாங்கள் இஸ்லாத்தின் நல்ல கொள்கைகளை அறிந்திருப்பதை நீங்கள் அறியமுடியுமே தவிர, இஸ்லாத்தின் கொள்கையறியா மக்கள் அறியமுடியாது. எவ்வளவுதான் சிறப்பாக இவ்விழாக்களில் என்னைக் கூட்டிவைத்துப் பேசச் சொன்னுலும், என்னை இஸ்லாத்தின் ஆதரவாளர்கள் பட்டியலில் சேர்த்துக்கொண்டாலும், மக்கள் இஸ்லாத்தின் நல்ல கருத்துக்களை அறியும்படி விழா நடத்துவதில் மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன்.

இவ்விழாவில் கலந்துகொள்ளுவதில் நண்பர் செங்கல்வராயன் அவர்கள் அடையும் பலனைவிட நான், அதிகமான நல்ல பலனை அடைகிறேன். நண்பர் செங்கல்வராயன் அவர்கள் எப்பொழுதும் எல்லோராலும் ஆஸ்திகர் என்றே கருதப்படுபவர். ஆனல் நான், ஆண்டுக்கு ஒருமுறை இம்மாதிரி விழாவில் கலந்துகொள்ளும் போதுதான் ஆஸ்திகன் என்று கருதப்படுகிறவன்; மற்றநேரங்களில் நாஸ்திகன் என்று எண்ணப்பட்டு வருகிறவன். அதனுல் தான் நண்பர் செங்கல்வராயன் அவர்களைவிட அதிக நல்ல பலன் எனக்குக் கிடைக்கிறதென்று குறிப்பிட்டேன்.

"இஸ்லாத்தின் உயரிய பண்புகள் இதற்குமுன் உலகுக்கு எவ்வளவு அவசரமாகத் தேவைப்பட்டதோ அதைவிட, இப்பொழுது தத்துவக் காட்டுக்குள் ஒளிந்தடி அலையும் இந்த உலகுக்கு மிக அவசர அவசரமாகத் தேவைப்படுகின்றன.

"இஸ்லாம் என்பது ஒரு மதமல்ல; ஓர் சிறந்த மார்க்கம். இஸ்லாமிய மார்க்கத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடுகிருர்கள்; இஸ்லாத்தின் மார்க்கம் சிறந்தவொரு மார்க்கமாக இருப்பதால் உலகில் உள்ள பெருங்குணவாளர்கள், இஸ்லாத்தை ஒரு மதமாகக் கொள்ளாமல் ஒரு மார்க்கமாகவே கருதுகின்றனர்.

"நான் மதத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கும், இங்கு நடைபெறும் நபிகள் நாயகம் விழாவிற்கும் முரண்பாடு இல்லை. இஸ்லாத்தை ஓர் மார்க்கமாகக் கருதி, நான் இவ்விழாக்களில் கலந்து கொள்கிறேன். இவ்விழாவில் நான் கலந்துகொள்வது இதுதான் முதல் தடவை யென்பதுமல்ல; இதுவே கடைசி தடவையுமல்ல.

"எனக்கு முன் பேசிய நண்பர் சமது அவர்கள், நபி அவர்கள், கடவுளால் அனுப்பப்பட்ட திருத்தூதர்களில் இறுதியாக அனுப்பப்பட்டவர் எனக் குறிப்பிட்டார். எனவே, நபியை 'இறுதி நபி' என்று சொன்னுர். நபியை அவ்வாறு குறிப்பிட்டதற்குக் காரணம், 'இறுதி நபி' என்று கூறியிருக்காவிட்டால், நபிகள் நாயகத்திற்குப் பின்னுல் வந்தவர்களும், 'நானும் கடவுளால் அனுப்பப்பட்ட திருத்தூதன்தான்; நானும் கடவுளால் அனுப்பப்பட்ட நபிகளில் ஒருவன்தான்' என்று கூறி மக்களை வெவ்வேறு பக்கம் திருப்பிவிட்டால் என்ன செய்வது என்றுதான், நபியை, 'இறுதி நபி' என்று சொல்லியிருக்கிருர்கள்.

"இஸ்லாமிய மார்க்கம் என் சிறந்ததெனப் போற்றப்படுகிறதென்ருல், மனிதனுக்கு என்னென்ன ஐயப்பாடுகள் ஏற்படுகின்றனவோ அதையெல்லாம் நீக்கக்கூடியவகையில், அதில் நல்ல கொள்கைகள் இருக்கின்றன. நபிகள் நாயகத்தின் போதனைகளில் ஒன்று 'ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது' என்பதாகும். இந்தப் போதனையை நான் நெஞ்சம் நெக்குருக நெக்குருக எண்ணிப்பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்.

"ஏன் நான், இந்தப் போதனையைச் சிறப்பாகக் கூறுகிறேனென்ருல், இப்போதனை மனிதனை சிந்திக்கத் தூண்டுகிறது. 'ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது' —ஏன் இணைவைத்தல் ஆகாது? ஆண்டவன் எப்படியிருக்கக்கூடும்? — என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்து, ஆண்டவன் இப்படியிருக்கக்கூடும் என்று சிந்தனை முடிவடைவதில்லை. எனவேதான், பழந்தமிழ் மக்கள், 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'— பார்த்தவர் சொன்னதில்லை; சொன்னவர் பார்த்ததில்லை' என்று கூறியிருக்கிருர்கள்.

"கடவுள் தன்மையின் தத்துவமே இதுதான். ஆண்டவனுக்கு இணைவைத்தால், ஆண்டவனுக்கு முன் ஒருவரை வைக்க வேண்டும். அந்த ஒருவர் யாராக இருக்க வேண்டும்? யாருக்குத் தெரியும்! அதனுல்தான் 'ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது' என்ற போதனையை நபி நாயகம் கூறியிருக்கின்ருர். மற்ற மார்க்கத்தில் இணை வைத்துக் கூறிய காரணத்தால்தான், எங்களைப் போன்றவர்களுக்கு ஏராளமான மாற்சரியங்கள் தோன்றின.

"இஸ்லாத்தில் எனக்கு மற்றும் ஒன்று பிடித்திருக்கிறது; அது, மனிதனை மனிதனுக ஆக்குவது; மனிதனை முழு மனிதனுக ஆக்குகிறது இஸ்லாமிய மார்க்கம்; மனிதனை—முடிந்தால் ஆண்டவனுக ஆக்கக்கூடிய வலிமை இஸ்லாமிய மார்க்கத்தில் இருக்கிறது.

"கடவுள், தூதரை அனுப்பியதற்குக் காரணம்—தானே நேரடியாக 'நான்தான் கடவுள்'. என்று கூறி மக்களை நம்பவைக்க முடியும்—ஆனுலும், தூதவரை அனுப்பியதற்குக் காரணம், "நான் அனுப்பியதாகச் சொல்லு; சொன்னுல்தான், மக்கள், 'கட

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டின் நிலையை ஆட்சியினர் உணரச் செய்ய!

எதிர்க்கட்சிகள் கடமை பற்றி மக்கள்சபைத் தலைவர்

சென்னை, ஆக. 7—

"ஓய்வு பெற்ற தலைமை நீதிபதிகள், அரசியல் மேதைகள், மற்றும், திறமை பெற்றவர்கள் மாநில—மத்திய 'மேல் சபை'களில் இடம் பெற்றிருக்க வேண்டும்"

என்று, பாராளுமன்றத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் கருத்தறிவித்துள்ளார்.

"சட்ட மன்றத்தில் சிறுபான்மையினரின் கருத்துக்களை அரசாங்கம் பொருட்படுத்த வேண்டும். சமுதாயத்தின் நலனுக்காகவே பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்தலில் கட்சித் தலைவர்களுக்குப் போட்டியில்லாத நிலை இருக்க வேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர், பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ள அமைப்பை விளக்கி, 'அங்கெல்லாம் 40 சதவிகித இடம் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்படுகிறது' என்று குறிப்பிட்டார்.

"எதிர்க்கட்சிகள் இடைத்தேர்தல்களில் போட்டியிட்டு, ஆளும் கட்சியைத் தோல்வியுறச் செய்வதுதான், ஆட்சியினரை, நாட்டின் நிலையை உணரச் செய்வதற்கு நல்ல மார்க்கமாகும்" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கிலாந்தில் பலமானதோர் எதிர்க்கட்சி உள்ளதுபோல், இந்தியாவிலும் ஒரு பலமான எதிர்க்கட்சி உருவாகக்கூடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களை அவர் சென்னை கலாச்சார நிறுவனத்தில் பேசும்போது கூறியுள்ளார்.

மாணவர்கள் அரசியல் கிளர்ச்சியில் பங்கு பெறக் கூடாதாம்!

மொரார்ஜிதேசாய் கூற்று

அகமதாபாத், அக். 7—

மாணவர்களையும், குழந்தைகளையும் அரசியல் கிளர்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ள ஊக்குவிப்பதில் உள்ள ஆபத்துகள் குறித்து காங்கிரஸ் ஊழியர்களுக்கு மொரார்ஜி தேசாய் எச்சரிக்கை விடுத்தாராம்!

'கடந்த ஆண்டு குசராத்தில் நடைபெற்ற மொழிவாரி மாநிலக் கிளர்ச்சிகளில் மாணவர்கள் ஒரு குறிப்பிடத் தகுந்த பங்கு பெற்றதின் மூலம், பிரதேசத்தின் சமூக வாழ்வுக்குப் பெருந்தீங்கு இழைத்தனர்' என்றும் அவர் குறிப்பிட்டாராம்!

'இதனால், மொத்தமாக, மாணவர் சமூகமே பொறுப்பற்றது எனப் பட்டங்கட்டக் கூடாது; வழக்கமாக அவர்களில் ஒரு சிலரே வழிதவறி நடக்கின்றனர்; அவர்களைப் பலரும் பின்பற்றுகின்றனர்' என்றும் மொரார்ஜி தேசாய் கூறினாராம்!

★★★

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'

என்று ஆடுகிறோம்—பாடுகிறோம்

நாம்

★

ஆனால்...

எங்கள் 'அகில இந்திய' ஏகாதிபத்தியம் நிலைக்க

இந்தி! இந்தி! இந்தி!

இந்திதான் வேண்டுமென்கின்றனர்

வடவர்

★

'இது அநீதி! அக்கிரமம்! எங்களுக்கு இந்தி வேண்டாம்'

என்று, நாம் மட்டுமல்ல...

அன்றொரு நாள் இந்தியை இங்கு புகுத்திய ஆச்சாரியார், மற்றும் பெரியார் இராமசாமி, நீதிக் கட்சித் தலைவர் பி. டி. இராசன், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேந்தர் ராஜா சர். முத்தையா செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எஸ். ஜி. மணவாள இராமானுசம், முன்னாள் திரு-கொச்சி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், தமிழரசுக் கட்சித் தலைவர் ம. பொ. சிவஞானம், தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் தலைவர் ஏ. இரத்தினம், இந்திய ஊழியர் சங்க எஸ். ஆர். வெங்கட்ராமன், கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் ஆர். பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், முன்னாள் 'கல்கி' ஆசிரியர் எம். பி. சோமசுந்தரம், டாக்டர் ஏ. சீனுவாசன்

முதலியோரும் கண்டனம் எழுப்பியுள்ளனர்!

என்றாலும்

இந்தித் திணிப்புத் தீவிரமாகிறது

★

1965-ம் ஆண்டுக்குள் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை அமர்த்திட துடியாய்த் துடிக்கின்றனர்

வடவர்

★

தமிழைத் தாழ்த்தி—தமிழரை நிரந்தர அடிமைகளாக்க

திட்டம் தயாராகிவிட்டது! ஆபத்து புறப்பட்டுவிட்டது!

★

வடவரின் இந்த

அநீதியை எதிர்க்க! ஆணவத்தை முறியடிக்க

அக். 13: இந்தி எதிர்ப்பு நாள்

★

டெல்லி அறிய! வெறியர் உணர நாட்டவரே! கண்டனக் குரல் எழுப்புவீர்

★★★

தூத்துக்குடியில் பொதுச்செயலாளர்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வி. வி. டி. நினைவுப் பள்ளிச் சிறார்களுக்குப் பொதுச்செயலாளர் பரிசுகள் வழங்கினர்.

பகல் 12 மணிக்கு, சுமார் 4,000 ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

உணவளிப்பைத் துவக்கி வைத்துவிட்டுப் பொதுச்செயலாளர் அங்கிருந்து புறப்பட்டார்.

நகரசபை வரவேற்பு

மாலை 4 மணியளவில், நகர மன்றக் கட்டிடத்தில், நகர மன்ற உறுப்பினர் திரு. அப்துல்கபூர் தலைமையில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நகர மன்ற உறுப்பினர்களும் ஏராளமான பொதுமக்களும் வந்திருந்தனர்.

நகர மன்றத்தில் அனுசரிக்கப்பட வேண்டிய முறைகள் பற்றி பொதுச்செயலாளர் அரியதோர் விரிவுரையாற்றினர்.

மாலை 5 மணிக்கு பாண்டு வாத்தியங்கள் முழங்க, வேட்டுச்சத்தம் அதிர கே. வி. கே. சாமியின் படம் வைத்து அலங்கரிக்கப்பட்ட காரில் பொதுச்செயலாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஊர்முழுவதும் பந்தல், தோரணங்கள் கட்டியும், எங்கு பார்த்தாலும் கழகக் கொடி ஏற்றியும் அன்று ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாவீரனுக்கு அஞ்சலி

இரவு 7-30 மணிக்கு, வ. உ. சி. திடலில், நகரமன்ற உறுப்பினர் இராமலிங்கம் தலைமையில், தலைமைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளரும், மாவட்டக் கழகச் சார்பில் மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், மாவட்டத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோரும்; தொழிற் சங்கங்கள் சார்பில் எம். எஸ். சிவசாமியும்; நகர தி. மு. கழகச் சார்பில் நகரச் செயலாளர் ஜோசப்பும்; நகர மன்றச் சார்பில் நகர மன்ற உறுப்பினர் அய்யாசாமியும் மாவீரன் சாமிக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

இரவு 9 மணிக்கு, வழக்கறிஞர் டி. செவந்தி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஆர்வி மில் கதவடைப்பைக் கண்டித்து, ஆர்வி மில் தொழிற் சங்க உப-காரியதரிசி சண்முகம் ஓர் தீர்மானம் கொண்டு வந்தார்; அதை வழிமொழிந்து ஆர்வி மில் தொழிற் சங்கத் தலைவர் சிவசாமி பேசினர்.

பின்னர், ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும், சேலம் வழக்கு நிதிக்கான அன்பளிப்புகளும் பொதுச்செயலாளருக்கு அளிக்கப்பட்டன.

புதியம்புத்தூர் காளையப்பன் அவர்களது ஆண் மகவுக்கு பொதுச்செயலாளர் 'இளங்கோவன்' எனப் பெயர் சூட்டினர்.

பின்னர், பொதுச்செயலாளர் 2 மணி நேரம் பேசினர்.

தூத்துக்குடியில் பொதுச்செயலாளர்

மாவீரன் கே. வி. கே. சாமிக்கு அஞ்சலி

நகரசபையில் வரவேற்பு

தூத்துக்குடி, அக். 8—

29—9—57 காலை 10 மணிக்கு, சிவந்தாகுளம் தி. மு. கழக உட்கிளைத் துவக்க விழா தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் நடந்தது.

மாவட்டச் செயலாளர் டி.ஆர். சுப்பிரமணியம், மாவீரன் கே. வி. கே. சாமியின் உருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன் கொடியேற்றினர்.

பின்னர், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நல்லுரை ஆற்றி கழகத்தைத் திறந்து வைத்தார்.

காலை 11 மணிக்கு, ஆரோக்கியபுரம் வி. வி. டி. நினைவுப் பள்ளிக்குப் பொதுச்செயலாளர் வந்து சேர்ந்தார்; சாமியின் கல்லறைக்கு மாலை அணிவித்தார். ஆசிரியைகளால் பாடல் ஒன்று பாடப்பட்டது.

பின்னர், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற

(5-ம் கலம் பார்க்க)

அரசியல் தலைவர்களுக்குக் கௌரவப் பட்டம்

முன்னாள் கவர்னர் முன்ஷி கண்டனம்

ஆமதாபாத், அக். 7—

"அரசியலில் ஆதிக்கம் வகிப்பவர்களின் அலங்காரத்திற்கும், அவர்களை திருப்திப்படுத்தவும், பல்கலைக் கழகங்கள் கௌரவப் பட்டங்களை வழங்குகின்றன. பல்கலைக் கழகத்தின் சிறப்புக்கு இழுக்கு ஏற்படாமலிருக்க இந்த முறையை விட்டொழிக்க வேண்டும்"

என்று முன்னாள் உத்தரப் பிரதேச கவர்னர் முன்ஷி, குசராத் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

குந்தா திட்டத்திற்குக் கனடா உதவி

உதகை, அக். 8—

குந்தா நீர்விசை மின்சாரத் திட்டம் பற்றி கனடா நிபுணர் பிராத்வியப்பு தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான எல்லா உதவியையும் கனடா செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

சென்னை மாநில அரசாங்கம் இந்தத் திட்டத்தை முடிக்காமல் விட்டுவிட கனடா பார்த்துக் கொண்டிருக்காது என்று தெரிவித்துள்ளார்.

அவசியமான உதவிகள் அனைத்தும் செய்து, திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்குக் கனடா உதவிபுரியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கம் ரூ. 3 கோடி உதவி கேட்டுள்ளதாம்.

கொழும்புத் திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் பெரும் திட்டங்களுக்குப் பொறுப்பேற்றுள்ள அதிகாரி பிராத், பைக்காரா, கிளன் மார்க்கன், சிங்காரா நீர்விசைத் திட்டங்களையும், குந்தா திட்டத்தையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

குந்தா திட்டத்திற்கு மொத்தம் ரூ. 35 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது; இப்போது அதிகமாகத் தேவைப்படும் ரூ. 3 கோடி உதவியை கனடா தர வேண்டிய நிலை உள்ளது.

கம்யூனிஸ்டு நாடான போலந்தில்!

மாணவர் குமுறல்; மக்கள் கொந்தளிப்பு!

வார்சா, அக். 9—

போலந்தின் தலைநகரான வார்சாவில், மாணவர்கள் நடத்திவந்த 'போபிரேகஸ்டு' என்ற இதழை அரசாங்கம் தடை செய்துள்ளது. இதனால், தங்களின் சுதந்தரம் பறிக்கப்படுகிறது என்பதால் மாணவர்கள், அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டுள்ளனர்.

இதைக்கண்ட அரசாங்கம் இராணுவப் படையை ஏவி இரப்பர் தடிகளைக்கொண்டு தாக்கியும், கண்ணீர்ப் புகை பிரயோகித்தும் அவர்களை முறியடிக்கும் கொடுமையில் ஈடுபட்டுள்ளது.

மாணவத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்; அவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி பொது மக்கள், கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரவும், பறிபோன சுதந்தரம் பாதுகாக்கப்படவும் மாணவர்களுக்கு உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தவும் பொதுமக்கள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்; இதைக் கண்டு அரசாங்கம் இராணுவத்தை ஏவி, கூட்டத்தினரை மிருகத்தனமாகத் தாக்கி கலைத்தனர்; மக்களை தடிகளால் தாக்கியும், பலரைக் கைது செய்தும் உள்ளனர்.

கிளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது.

ஈ. வெ. கி. சம்பத் இலட்சியக் குரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஹோம்லண்ட்' பத்திரிகையிலே வருகின்ற, மருந்து மிகப் பிடித்தமாயிருக்கின்றது. ஆகவே, அந்த மருந்தைக்கொண்டு வந்து சேர்ப்பதிலே பல புதிய துணைவர்கள் நமக்குக்கிடைப்பார்கள்.

"இந்த வெறியர்களினுடைய ஏகாதிபத்தியம் உடைத்தெறியப்பட வேண்டுமென்ற அணியிலே இன்றைக்குப் பலபேர் சேர்ந்திருக்கிறார்கள். நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்; மராட்டியத்திலே இருக்கிற மக்களுக்கு இந்தியைப் படிக்க முடியும்; ஆகவே அவர்கள், இந்தியைப் பற்றிக் கவலைப்படாமலிருந்தார்கள். இன்றையத்தினம் மராட்டியத்தினுடைய உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்கள் பார்லிமெண்டிலே ஒலிக்கப்பட்டதற்குப் பிறகு வந்து கூறுகிறார்கள்—'எங்களுக்கு இந்தி படிக்கவரும்; ஆனாலும், இந்தி எதற்காக எங்களுக்கு? அதிலே ஆதிக்க வெறி—சூழ்ச்சி எண்ணம் இருக்கிறது'—என்று குறிப்பிடுகிறார்கள்.

"பஞ்சாபிலே இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது என்ன? 'இந்தியைக் காப்பாற்றுவதற்காகப் போராட்டம்' என்று ஒருவன் சொல்லுகிறான்; 'அதை எதிர்க்கிறோம்' என்று மற்றொரு பக்கத்திலே சீக்கியர்கள் அணி வகுத்து நிற்கிறார்கள்,பஞ்சாபிலே இந்தியைக் காப்பாற்ற வேண்டுமென்று போர்க்குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றவர்கள்; டெல்லிக் கடைத் தெருவிலே இருக்கின்ற சீக்கியர்களைப் பார்த்து, அடித்து, 'இந்தி வாழ்க!' என்று சொல்லுகிறார்கள்; அந்த அளவு பெருக்கும் உணர்வு வருகிறது. ஆகவே, 'இந்தி வாழ்க!' என்பது மொழிப் பிரச்சினையல்ல; இந்தி வெறியர்களினுடைய ஆதிக்கம் வளர வேண்டுமென்பதற்கு, இன்றையத்தினம் இந்தி மொழிப் பிரச்சினை ஒரு பலகையாக—ஒரு பாவனையாகக் காட்டப்படுகிறது என்றுதான் அங்கிருக்கிறவர்கள் உணருகிறார்கள்.

"அதேபோல், வங்காளத்திலே இருக்கின்றவர்கள் கூறுகிறார்கள்—'இந்தி எங்களுக்கு வேண்டவே வேண்டாம்' என்று!

"இந்தப் பிரச்சினையில் என்றும் இல்லாத விழிப்புணர்ச்சியோடு, எந்தப் போராட்டத்திலேயும் காட்டாத கட்டுப்பாடு உணர்ச்சியோடு நாம் நின்றால்—தமிழ் நாட்டின் சரித்திரக் காவலனுக்குப்பின்னாலே நாம் நின்றால் நிச்சயமாகத் தமிழ் நாட்டிலே இந்தி வராமல் தடுக்கின்ற கட்டம் மட்டுமல்ல — திராவிட நாடு மிக அண்மையிலே வந்து நமது வீட்டுக் கதவைத் தட்டுகின்ற கட்டத்தையும், நம்முடைய நாளிலேயே நாம் காண்போம் என்பதை எடுத்துக் கூறுவதற்குத்தான் நான் இதை உங்கள் மத்தியிலே கூற விரும்புகிறேன்.

"இன்றையத் தினம் ஆந்திரத் தோழர்கள் பல பேர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள், நேருவுக்கு காங்கிரஸ்காரர்கள் கொடுத்த விண்ணப்பத்தில்! காங்கிரஸ்காரர்கள் போட்டிருக்கிறார்கள்! காங்கிரசைச் சேர்ந்த ஒரு பழுத்த காங்கிரஸ்காரர்—பிரகாசம் மந்திரிசபையின்போது, சென்னை சட்டசபையிலே ஆந்திரத்திலேயிருந்து வந்திருந்த எம்.எல்.ஏ.-க்களிலே ஒருவராக இருந்தவர் — நான் இந்தியை எதிர்த்துப் பேசியதற்குப் பிறகு வந்து சொல்லும்போது, 'இந்திப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே நான் உங்களோடுதான் முழுக்க முழுக்க இருக்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

"அன்றைக்கு அந்தப் பேச்சினுடைய ஆவேசத்திலே சொக்கிப்போய் மட்டும் அவர் அவ்வாறு சொல்லவில்லை; நான் இரயில் ஏறுகிறவரையில் என்னைப் பார்க்கின்ற நாளிலேயெல்லாம் அவர் சொல்லிக்கொண்டிருந்தார்; 'இந்தி சுலபமான மொழியா இல்லையா என்ற பிரச்சினையைப் பேசுகிறார்களே, இது எவ்வளவு போக்கிரித்தனம்?' என்று அவர் சொன்னார்; 'இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதுதான் பிரச்சினையே தவிர, இந்தி சுலபமானதா இல்லையா என்பதைப்பற்றி இவர்கள் யார் நமக்குச் சொல்லுவதற்கு! இந்தி சுலபமானதாயும் இருக்கலாம்—நமது அபாரமான சாமர்த்தியத்தின் காரணமாக மிக எளிமையானதாயும் இருக்கலாம்; ஆனால், அது தேவையா இல்லையா என்ற அரசியல் பிரச்சினையைப் பற்றி இவர்கள் வாய் மூடிக்கொண்டு வெகுகாலம் காலம் தாழ்த்திவிடமுடியாது'— என்று அவர் சொன்னார்.

"இன்னொரு மிகப் பெரிய மகிழ்ச்சிகரமான சூழ்நிலை என்னவென்றால், தமிழ்நாட்டிலிருந்து அங்கு வந்திருக்கின்ற காங்கிரஸ்காரர்களுக்குத் திடீரென்று-இந்த ஒருமாத காலமாக 'தமிழ் உணர்ச்சி' வந்திருக்கின்றது! 'தமிழ் உணர்ச்சி மட்டுமல்ல— கொஞ்சம் 'தைரிய'மும் வந்திருக்கிறது; நேருவுக்குக் கடிதம் எழுதுகிற அளவு தைரியம் வந்திருக்கிறது. என்ன கடிதம் எழுதுகிறார்கள்?—'நேரு பிரானே! இந்தியை இப்படிக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லுவதைப்பற்றி பலபேருக்குத் தமிழ்நாட்டிலும், இன்னும் பல இடங்களிலும் 'அதிருப்தி' இருக்கிறது; ஆகவே, இந்தி கொண்டுவருவதை 1965-லே கொண்டு வராமல், 1990-லே கொண்டுவந்து எங்களைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்' என்று கையெழுத்துப் போடுகிறார்கள்.

"இதற்கு என்ன கருத்து?—1990 வரையில் நாங்கள் அவ்வளவு காலம்தான் உயிரோடு இருப்போம்; அதற்குப் பிறகு எவனோ இருப்பான்—எவனோ பார்த்துக் கொள்ளட்டும்—என்ற கருத்திலே அவர்கள் எழுதுகிறார்கள்; ஆனால், இதற்காவது அவர்களுக்குத 'தைரியம்' வந்ததே என்பதை எண்ணி நாம் பாராட்டத்தான் வேண்டும்; இதற்கு முன்பு இதையும் அவர்கள்சொன்னவர்கள் அல்ல!

டெல்லியில், 'எந்த இந்தி' என்பதைப் பற்றித்தான் விவகாரம் இருக்கிறது என்ற மாதிரியிலே அரசியல் சூழ்நிலை இருந்தது--காந்தியார் சொல்லிப்போன இந்துஸ்தானியா? அல்லது தாண்டன் போன்ற இந்தி வெறியர்கள்—வடநாட்டு வெறியர்கள் கூறுகின்ற சமஸ்கிருதம் கலந்த இந்தி மொழியா?—என்பதைப் பற்றித்தான் 'இந்தியா பூராவும்' சர்ச்சை செய்து கொண்டிருக்கிறதென்ற போலித்தனமான அரசியல் எண்ணத்தை--புளுகை அங்கே நிலைநாட்டியிருந்தார்கள். இப்பொழுதுதான், இந்தியே வேண்டாம் என்ற ஒரு பெரிய—மூன்று கோடி மக்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அனுதாபம் காட்டக்கூடிய இன்னும் ஏழு கோடி மக்கள் இருக்கிறார்கள என்ற—உண்மை அவர்களுக்கு உறைத்திருக்கிறது. அதிலே ஆந்திரத் தோழர்கள் கையெழுத்திடுகிறார்கள்—ஒரிசாக்காரர்கள் கையெழுத்திடுகிறார்கள்—கேரளத்திலேயிருந்து வந்திருந்தவர்களும் கையெழுத்திடுகிறார்கள் - கர்னாடகத்தைச்சார்ந்த சில எம். பி.-க்களும் கையெழுத்திடுகிறார்கள்."

துருக்கி—சிரிய எல்லையில் துப்பாக்கிச் சண்டை

கெய்ரோ, அக். 8—

துருக்கியும்—சிரியாவும் எல்லையோரத்தில் சண்டையிட்டுக் கொள்வதாகவும், இருசாராரும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் டமாஸ்கசிலிருந்து, தரப்படும் செய்தி ஒன்று கூறுகிறது.

சில துருக்கியர்கள், சிரிய எல்லைக்குள் நுழைவதை சிரிய இராணுவத்தினர் தடுத்ததாகவும், இதற்காகத் துருக்கிய இராணுவத்தினர் துப்பாக்கியை நீட்டியதாகவும், உடனே சிரிய இராணுவத்தினரும் அடியைத் திரும்பக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதனை ஒட்டி, இப்போது நியூயார்க்கிலிருக்கும் தனது வெளிவிவகார மந்திரியான சலே எல்பிதபர் என்பாரை சிரிய சர்க்கார், ஐ. நா. பொதுச்செயலாளரின் கவனத்திற்கு சிரிய எல்லையில் துருக்கிய இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் விஷயத்தைக் கொண்டுவருமாறு கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

செயற்கைச் சந்திரன்

சக்தி இழந்துவிட்டதா?

லண்டன், அக். 9—

சோவியத் ரஷ்யா பறக்கவிட்ட செயற்கைச் சந்திரனிலிருந்து மின் ஒலி அலைகள் கேட்கப்படவில்லையாம். அதிலிருந்த வானொலிக் கருவி சக்தியிழந்து விட்டதாம். மின்சார உள்ளடக்குக் கருவி (பாட்டரி) சக்தி குறைந்து விட்டதாம்.

ரஷ்ய நிபுணர்கள் இதைத் தெரிவித்துள்ளனர். இந்தச் செயற்கைச் சந்திரனை ரஷ்ய நிபுணர்கள் கேள்வி கேட்டு வருவதாகவும், செயற்கைச் சந்திரன் பதிலளித்துவருவதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கைச் செலவு புள்ளி

சென்னை, அக். 8—

21-9-57ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஏற்றமோ இறக்கமோ இன்றி 369-லேயே நின்றது.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.

12 : காவேரிப்பட்டினம்
13 : கோவை
14 : ஆனைமலை
வேட்டைகாரன் புதூர்—மாலை
பொள்ளாச்சி—இரவு
15 : கோபிசெட்டிப்பாளையம்
16 : சென்னிமலை
20 : காஞ்சீபுரம்—கலைக்கழகம்
21 : கீழ் எழாச்சூர்
22 : கீரனூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்

சென்னை மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

★

"பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கைக்கேற்ப 13—10—57 அன்று, கிளைக் கழகங்கள், துணை அமைப்புகள், மன்றங்கள், படிப்பகங்கள் அனைத்தும் 'இந்தி எதிர்ப்பு நாளை'க் கொண்டாடக் கேட்டுக் கொள்கிறேன்.

"சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் 13—10—57 மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

"அன்று பிற்பகல் 3-மணிக்கு மூலக்கொத்தளத்திலுள்ள—தாய்மொழிக்காக தம் இன்னுயிர்நீத்த இலட்சியக் காளைகள் தாளமுத்து—நடராசன் கல்லறைக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு, அங்கிருந்து மாபெரும் ஊர்வலம் துவங்கி திருவல்லிக்கேணி கடற்கரையைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

"கிளைக் கழகங்கள், துணை அமைப்புகள் ஆகியவற்றின் தோழர்கள் அனைவரும் கழகக் கொடிகள், இந்தி எதிர்ப்புத் தட்டிகள் ஏந்தி ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்."

கோ. செங்குட்டுவன்
துணைச்செயலாளர்
சென்னை மாவட்ட தி. மு. க.

பர்மாவில் மறைமலை அடிகள் நினைவுநாள்

13—10—57 மாலை 4-மணிக்கு பர்மா இராமகிருஷ்ண மண்டபத்தில், திரு. ஆர். துரைசாமி தலைமையில் மறைமலையடிகள் நினைவு விழா நடைபெறும். தோழர்கள் எப். எஸ். துரைசாமி, நாரா. நாச்சியப்பன், ஒ. எம். சிவராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் கூட்டம்

10—10—57 மாலை 6 மணிக்கு, சென்னை-மெமோரியல் மண்டபத்தில், தோழர் கி. மனோகரன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன் எம். எல் ஏ., ஆர். எஸ். பாண்டியன், என். சிவரத்தினம், வரதாச்சாரி, எல். இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

நீங்காத் தடை நீடிப்பு

சென்னை, அக். 9—

போலீஸ் கமிஷனரின் முன் அனுமதியின்றி கூட்டம் நடத்தவோ, ஊர்வலங்கள் நடத்தவோ கூடாது என்று சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டுள்ள தடை மீண்டும் அக்டோபர் 23-ந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

அத்தாணி:
வானொலி திடலில்
11—10—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: இரா. ஈசுவரன்
பேசுவோர்:
ப. நாராயணன்
எஸ். அப்பாவு
அத்தாணி பாபு

★

தண்டலை:
என். எஸ். கே. திடலில்
10—10—57 மாலை 5-மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: மு. சந்திரகாசனார்
பேசுவோர்:
பொன். சொக்கலிங்கம்
கோபால கிருட்டிணன்
கணபதி ராமசுப்பையா
ஆறுமுகம்
சிறுமி இளங்கோ

★

மாயூரம்:
நகரப் பூங்காவில்
10—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். கிட்டப்பா
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
சி. கிருஷ்ணமூர்த்தி

பவானிவட்ட விவசாய முன்னேற்ற மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு:

11—10—57 மாலை 3 மணியளவில் அத்தாணியில், உடுமலைத் தோழர் ப. நாராயணன் தலைமையில் பவானி வட்ட விவசாயிகள் முன்னேற்ற மாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும்.

கலைவாணர் இளைஞர் மன்றத் திறப்புவிழா

10—10—57 மாலை 6 மணிக்கு, சென்னை - தண்டையார்ப்பேட்டை, அமராஞ்சிபுரம் அருகாமையில் தோழர் என். சிவரத்தினம் தலைமையில் மேற்படி மன்றத் திறப்புவிழா நடைபெறும்; தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், வே. கபிலன், அபு அல்லால் ஆகியோர் பேசுவர்.

உறையூர் கே. வி. கே. சாமி படிப்பகப் பொதுக்கூட்டம்

11—10—57 மாலை 6 மணிக்கு, திருச்சி-உறையூர் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் தாமரைச்செல்வன், எம் எஸ். மணி, எஸ். நெடுமாறன் ஆகியோர் பேசுவர்.

கிராண்ட்லைன் வ. உ. சி. நினைவு மன்ற ஆண்டுவிழா

11—10—57 மாலை 6 மணிக்கு, சென்னை செங்குன்றம் அடுத்த கிராண்ட்லைன் கிராமத்தில், வ. உ. சி. மன்ற 5-ம் ஆண்டுவிழா, தோழர் டி. சண்முகம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி-கல்யாணசுந்தரம், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

மாலை 5 மணிக்கு டேப்-இராதா மாணிக்கம் இன்னிசையுண்டு.

அண்ணா தெளிவுரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வுன்தான் அனுப்பினரா?' என்று சிந்தித்துப் பார்ப்பார்கள்—எண்ணிப் பார்ப்பார்கள்' என்று, மனிதன் சிந்திக்க வேண்டியதின் அவசியத்தைக் கருதி, கடவுள், திருத்தூதரை அனுப்பியிருக்கிறார். எனவேதான், பழந்தமிழ் மக்கள 'அறிவே ஆண்டவன்—ஆண்டவனே அறிவு' என்று கூறியிருக்கிறார்கள்.

(பேச்சு முடியவில்லை)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிட்டப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்; இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.